**மேல; மாகாண சபை பாடசாலைகளில; நிலவும; சிங;கள, தமிழ; மற;றும; ஆங;கில மொழிமூல இலங;கை ஆசிரியா; சேவையின; 3 ஆம; வகுப;பின; 1 (அ) தரத;தின; ஆசிரியா; வெற;றிடங;களுக;கு பட;டதாரிகளை இணைத;துக; கொள;வதற;கான திறந;த போட;டிப; பரPட;சை - 2023**

மேல் மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரிய வெற்றிடங்களுக்காக மேல் மாகாண அரசாங்க சேவையில் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைவாக இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 தரம் 1 (அ) இற்கு இணைத்துக் கொள்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகுதிகளை பூர்த்தி செய்துள்ள மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல பாடங்களுக்கான ஆட்சேர்ப்பு மாகாண அடிப்படையில் செய்யப்படுவதுடன் தற்போதுள்ள ஒதுக்கீடுகள் மற்றும் சேவை தேவைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் 2023.06.30 வரையிலான வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சையில் பெறப்பட்ட மொத்த மதிப்பெண்கள் மற்றும் செய்முறைப் பரீட்சையில் பெறப்பட்ட மதிப்பெண்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இருக்கும்.

**02. சம்பள அளவுத்திட்டம் :**

இப்பதவிக்குரிய மாதாந்த சம்பளம் 2022.01.05 ஆந் திகதி 03/2016(iv) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஜீ.ஈ-1-2016 ஆம் சம்பளத் தொகுதிக்கு உரியதாக 31,490 – 6X445 – 7X525 – 2X600 – 39,035 ஆகும். நீங்கள் இந்த சம்பளத் திட்டத்தின் 14 ஆவது படியான ரூ. 37,835.00 சம்பள நிலையில் அமர்த்தப்படுவீர்கள்.

**03. கல்வி மற்றும் வேறு தகைமைகள் -**

**3.1 கல்வித் தகைமைகள் :**

i. விண்ணப்பத்தாரர்கள் கற்பித்தல் நோக்கங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறப்புத் துறைகளைச் சேர்ந்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் பட்டமொன்றைப் பெற்றிருக்க வேண்டும் இப் பட்டம் விண்ணப்பங்கள ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்திற்கு முன் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

ii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தவணைகளில தாய் மொழி மற்றும் கணிதத்தில் சித்திகளோடு மூன்று திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக வேண்டும். (ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

மற்றும்

iii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர( உயர் தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல வேண்டும்.

மிக முக்கியம் : (விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை)

- விண்ணப்பத்தாரர்கள் தங்கள் பட்டத்திற்கு அமைவாக விண்ணப்பிக்கக்கூடிய பாடங்கள் குறித்து கவனம் செலுத்துதல வேண்டும்.
- ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டப்படிப்பில் பயின்ற முக்கிய பாடம் /பாடங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும
- ஒரு பாடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
- விண்ணப்பித்த பாடம் மற்றும் மொழியை எக்காரணத்திற்காகவும் பின்னர் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

**3.2 உடல் மற்றும் உளத் தகுதிகள் :**

எல்லா விண்ணப்பதாரிகளும் ஆசிரியராக கடமையாற்றுவதற்கு உகந்த உடல் மற்றும் உள தகுதியுடன் இருத்தல் அவசியம்.

**3.3 வயது :**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில் வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**3.4 வேறு தகுதிகள் :**

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராயிருத்தல் வேண்டும்.
iii. மேல் மாகாணத்தின் எப் பிரதேசத்திலும் சேவையாற்ற இயலுமாயிருத்தல் வேண்டும்.
iv. விண்ணப்பதாரி அல்லது அவரது துணை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னரான 03 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக தொடர்ந்து வசிப்பவராயிருத்தல் வேண்டும். (கிராம அலுவலகரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் ( டி.எஸ் 04) மூலம் நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். )

**04. சேவை நிபந்தனைகள் :**

i. அரசாங் மாகாண அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும்,மேல் மாகாண அரசாங்க சேவையில் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும், அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அல்லது இதன் பின் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்குட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 தரம்1(அ) இற்கு நியமிக்கப்படுவர்.
ii. இந் நியமனம் நிரந்தரமானது, பதவிக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நியமனம் பெறுபவர்கள் கீழ்ப் படிதல் வேண்டும்.
iii. இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் 03 வருட நன்னடத்தைக் காலத்திற்குட்பட்டாக வேண்டும்.
iv. பதவியுயர்வுகள் மேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.
v. 2020.10.16 ஆந் திகதி அ.நி.சு. 18/2020 மற்றும் அவ்வப்போது அதில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு இணங்க பரிந்துரைக்கப்பட்ட இரண்டாவது அரசகரும மொழியில் தேர்ச்சி பெற வேண்டும்.

**05. ஆட்சேர்ப்பு :**

**5.1 ஆட்சேர்ப்பு முறை :**

2008.07.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறையில் உள்ள மேல் மாகாண ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின்7.2.4 ஆம் பிரிவின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

தேர்வு செய்வதற்காக எழுத்து மூல போட்டிப் பரீட்சையொன்று நடைபெறும் .

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவோர் அவர்கள் பெறும் புள்ளிகளின் தகைமை வரிசைப்படி ஒவ்வொரு பாடத்திற்கும் மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களின் மூன்று மடங்கினர் (03) பொதுவான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு அதில் தகுதி பெறுவோர் செயன் முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை மற்றும் செயல் முறைப் பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரர்கள், தற்போதுள்ள வெற்றிடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் (ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.4.3.1 பிரிவு அதிகாரம் உடையதாகும்)

இந்த வர்த்தமானி அறிவித்தலின்படி நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் காலப்பகுதி 2023.06.30 ஆந் திகதி உள்ள வெற்றிடங்களுக்கு மாத்திரமே உரித்தானதாகும்.

**5.2 எழுத்துப் பரீட்சை - இந்த பரீட்சை இரு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.**

| வினாத்தாள் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை (நேரம் - 01 மணித்தியாலம் ) | 100 | 40 |
| 02. பொது அறிவு (நேரம் - 01 மணித்தியாலம் ) | 100 | 40 |

பாடத்திட்டம் :

பாட இலக்கம் 01 - நுண்ணறிவுப் பரீட்சை

விண்ணப்பத்தாரியின் ஆசிரியர் சேவைக்குரிய திறமை, தர்க்கிக்கும் ஆற்றல் தொடர்பான அறிவை அளவிடுவதை நோக்காகக் கொண்டு இவ் வினாப்பத்திரம் தயாரிக்கப்படும் இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் 50 வினாக்களைக் கொண்டது அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் அவசியம்.

பாட இலக்கம் 02 - பொது அறிவு

ஆசிரிய துறைக்குரிய , அத்துறை தொடர்பாக உள்ள பொது அறிவு மற்றும்/ அல்லது தேசிய அளவில் நடைபெற்ற அல்லது நடைபெறும் கல்வித்துறையின் போக்குகள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயமாக்கல் தொடர்பான பொது அறிவினை பரீட்சிக்கும் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**5.3 பரீட்சை நடைமுறை :**

i. இப் பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும்.
ii. எல்லா விண்ணப்பதாரிகளும் அனைத்துப் பாடங்களுக்கும் குறிப்பிட்ட மொழியில் விடையளிக்க வேண்டும். அந்த மொழி மூலம் தாம் நியமனம் பெறவிருக்கும் மொழி மூலமாயிருத்தல் வேண்டும்.
iii. விண்ணப்பதாரியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
iv. எல்லா விண்ணப்பதாரிகளும் இரு பாடங்களுக்கும் தோற்றுதல் அவசியமாகும்.
v. ஒரு தடவையில் இணைத்துக் கொள்ளும் எண்ணிக்கையானது நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

**5.4 பொது நேர்முகத் தேர்வு :**

சேவைப் பிரமாணக் குறிப்பின் படி பிரசுரிக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலில் அல்லது பத்திரிகை விளம்பரத்தில் அல்லது இணையத்தள விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தகைமைளைப் பூர்த்தி செய்துள்ளாரா என பரீட்சித்தல் மற்றும் உடல் தகுதியினைப் பரீட்சித்தல்.

**5.5 செயன்முறைப் பரீட்சை முறை :**

செயன்முறைப் பரீட்சையாக விண்ணப்பதாரி தன்னால் இனங்காணப்படும் ஒரு தலைப்பின் கீழ் செயல் முறை முன்வைப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டும். அதற்கு கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொ. இல. | செயன்முறைப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நியமங்கள் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | குறிக்கோள் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03 | தொடர்பாடல் தெளிவு | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | முன்வைத்தல் நுட்ப முறைகளின் பயன்பாடு | 05 | 02 |
| | மொத்தப் புள்ளிகள் | 25 | |

**5.6 செயன்முறைப் பரீட்சை முறை**

(i) செயன்முறைப் பரீட்சைக்காக (05) நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும்.
(ii) செயன்முறைப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகூடிய புள்ளிகள் (25) ஆகும்.
(iii) செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு நியமங்கள் தொடர்பாகவும் ஆகக் குறைந்தது 02 புள்ளிகள் வீதம் பெறல் வேண்டும்.
(iv) செயன்முறைப் பரீட்சையின் மதிப்பீடு மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுச் சபையொன்றினால் மேற்கொள்ளப்படும்.

**5.7 நியமங்களின் குறிக்கோள்கள்**

(i) குறிக்கோள் மற்றும் பிரவேசம்
வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தினை விளக்குதல் மற்றும் பாடப் பிரவேசம் செய்யும் திறமையினை மதிப்பிடல்.

(ii) ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு
ஒரு ஆசிரியராக சிறந்த ஆளுமையுடன் காணப்படல் மற்றும் கற்பித்தலில் சிறப்பாக குரலினை உள்ள திறமையினை மதிப்பிடல்.

(iii) தொடர்பாடல் தெளிவு
கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் உரிய விடயங்களை உற்பத்தித்திறனுள்ள முறையில் தெரிவிக்கும் திறமையினை மதிப்பிடல்.

(iv) நேர முகாமைத்துவம்
வழங்கப்படும் காலப்பகுதியினுள் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் திறமையினை மதிப்பிடல்.

(v) முன்வைத்தல் நுட்பமுறைகளின் பயன்பாடு
நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக முன்வைத்தல் நுட்பமுறைகளை சிறப்பாகப் பயன்படுத்தும் திறமையினை மதிப்பிடல்.

**06. பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக்கான கட்டணம் ரூ 600/- ஆகும். இக்கட்டணத்தினை மேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் மேல் மாகாண வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு வரவு வைத்து பணமாகச் செலுத்தி தமது பெயரில் பெறப்பட்ட மே.மா.01 பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் அதற்குரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். மே.மா.01 பற்றுச் சீட்டின் மூலப் பிரதியினைத் தவிர வேறு எந்தப் பற்றுச்சீட்டோ அல்லது முத்திரைகளோ அல்லது காசுக் கட்டளைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவ்வாறான பற்றுச் சீட்டுக்களை முன்வைக்கும் விண்ணப்பத்தாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது, இப் பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கப்படவோ, வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ மாட்டாது. என்பதனை கருத்தில் கொள்ளவும்.(பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை எதிர்கால பயன்பாட்டிற்காக தம்முடன் வைத்திருத்தல் வேண்டும்)

**07. விண்ணப்பிக்கும் முறை :**

i. எல்லா விண்ணப்பத்தாரிகளும் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்திய பின்னர் www.psc.wp.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் நுழைந்து உரிய தகவல்களை வழங்கி விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் (submit) விண்ணப்பப்படிவத்தினை தரவிறக்கம் செய்யலாம். விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யும் போது அட்டவணை 01 இனைப் பயன்படுத்துதல் வேண்டும்.
ii. நிகழ் நிலை மூலம் விண்ணப்பித்து, (ழடெiநெ) பதிவிறக்கம் செய்யப்படாத விண்ணப்பங்கள் (னழறடெழயன) மற்றும் கணினி மூலம் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.
iii. பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள், அடிப்படை தகுதிகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் எதுவுமின்றி நிராரிக்கப்படும். (விண்ணப்பத்தின் நிழற் பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுடையதாகும் )
iv. விண்ணப்பிக்கும் பாடத்தினை எக்காரணத்திற்காகவும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படாது ஒரு விண்ணப்பத்தாரி ஒரு விண்ணபத்தினை மாத்திரமே சமர்ப்பித்தல் வேண்டும்.
விண்ணப்பப்படிவத்துடன் தேவையற்ற வகையில் எந்தவொரு சான்றிதழையும் இணைத்து அனுப்புதல் தேவையற்றது.
பணம் செலுத்திய பற்றுச் சீட்டினை மாத்திரம் ஒட்டி அனுப்ப வேண்டும். (இணைத்து அனுப்பக்கூடாது)
v. விண்ணப்பத்தாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :
விண்ணப்பத்திலும் அனுமதி அட்டையிலும் விண்ணப்பத்தாரியின் கையொப்பம் அதிகாரம் பெற்ற அலுவலகர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி, அதிகாரமுள்ள அலுவலகர், பொலிஸ் சேவையின் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலகர் ரூ 498,960/- இற்கு மேலான வருடாந்த அடிப்படைச் சம்பளம் பெறும் அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலகர், பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, மதகுருவாக கருத்தக்க அளவிலான நிலையில் இருக்கும் ஒரு மதகுரு ஆகியோர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.
தற்போது மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களின் ஒப்பம் உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு விண்ணப்பப் படிவம் உரிய திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பப்பட வேண்டும்.
vi. நிகழ் நிலை (online) மூலம் விண்ணப்பிக்கக் கூடிய இறுதித் தினம் - 2023.08.25
vii. 2023.08.25 ஆந் திகதிக்கு முன்னர் நிகழ் நிலைமுறையின் மூலம் விண்ணப்பித்த பின்னர் பதிவிறக்கம் செய்யப்பட்ட குறிப்பு இலக்கம் (Reference number) கொண்ட விண்ணப்ப படிவங்களை விண்ணப்பத்தாரியின் கையொப்பத்துடன், கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின் 2023.09.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

செயலாளர்,
மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு ,
இலக்கம். 628 ,10 ஆவது மாடி , ஜனஜய சிட்டி கட்டடம்,
நாவல வீதி , இராஜகிரிய.

விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண சபை ஆசிரிய சேவைக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளல்-2023" எனவும், விண்ணப்பிக்கும் பாடத்தினையும் குறிப்பிட வேண்டும்.

08. தபாலில் தொலைந்த அல்லது கால தாமதமாகிய விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப் பாடும் கருத்திற்கொள்ளப்படாது. காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்விதத்திலும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

09. இவ் விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான இறுதி தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மற்றும் இப் பரீட்சையினைப் பிற்போடுதல் , இரத்துச்செய்தல் அல்லது நடைபெற்ற பின்னர் தேர்வு செய்தல்/செய்யாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும்.

10. விண்ணப்பம் கிடைத்ததாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பத்தாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அதை தெரியப்படுத்தும் அறிவித்தலொன்று மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.psc.wp.gov.lk என்னும் இணையத்தளத்தில் வெளியிடப்படும் அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 07 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அறவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது பற்றி மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு தெரியப்படுத்தல் வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்பிரதி, விண்ணப்பத்தினை பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டுடன் உங்கள் முழுப்பெயர்,முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றுடன் பரீட்சையின் பெயர் ஆகியவற்றை சரியாக குறிப்பிட்டு மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவின் பரீட்சைகள் பிரிவில் வினவ வேண்டும்.

11. பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளனர் எனக் கருதப்பட்டு பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பமளித்தல் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படலாகாது விண்ணப்பதாரி தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத்தெரிய வரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சைக்கான விண்ணப்பத்தாரி நிலையினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் நியமனம் வழங்குவதை நிராகரிப்பதற்கும் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

12. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில சொற்களுக்கிடையே ஏதும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்களச் சொல்லே அதிகாரம் பெறும்.

13. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத் தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும், அவ்வாறில்லையாயின் எந்த வித அறிவித்தல்களுமின்றி நியமனம் இரத்துச் செய்யப்படும்.

**அட்டவணை 01**

வெற்றிடங்கள் நிலவும் பாடங்கள், வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் மொழிமூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்மைய விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழிமூலம் தெரிவு செய்யப்பட வேண்டும்.

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | மொழி மூலம் | | |
|---|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| இரசாயணவியல் | 1 | நான்காண்டு சிறப்புப் பட்டப்படிப்பில் க.பொ.த (உயர்தர) பாடத்திட்டத்தின்படி பட்டப்படிப்பின் மொத்தப் பாடத்தில் 1/3 பகுதியை முதன்மைப் பாடமாகவோ அல்லது வேறு பாடமாகவோ படித்திருக்க வேண்டும் அல்லது மூன்று வருட பட்டப்படிப்பில் மொத்த பாடத்தில் ஆகக் குறைந்தது 1/3 பங்கை சம்பந்தப்பட்ட பாடத்தில் பூர்த்தி செய்திருக்க வேண்டும். | 24 | 2 | 3 |
| பௌதீகவியல் | 2 | நான்காண்டு சிறப்புப் பட்டப்படிப்பில் க.பொ.த (உயர்தர) பாடத்திட்டத்தின்படி பட்டப்படிப்பின் மொத்தப் பாடத்தில் 1/3 பகுதியை முதன்மைப் பாடமாகவோ அல்லது வேறு பாடமாகவோ படித்திருக்க வேண்டும் அல்லது மூன்று வருட பட்டப்படிப்பில் மொத்த பாடத்தில் ஆகக் குறைந்தது 1/3 பங்கை சம்பந்தப்பட்ட பாடத்தில் பூர்த்தி செய்திருக்க வேண்டும். | 31 | 3 | 3 |

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | மொழி மூலம் | | |
|---|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| உயிரியல் | 3 | நான்காண்டு சிறப்புப் பட்டப்படிப்பில் தாவரவியல்/ தாவர உயிரியல் அல்லது விலங்கியல் முதன்மைப் பாடமாகவும் மற்றும் முதன்மைப் பாடமாக தாவரவியல்/ தாவர உயிரியலாகுமிடத்து மற்றைய பாடமாக விலங்கியல் பாடமும் முதன்மைப் பாடமாக விலங்கியல் பாடமாகுமிடத்து மற்றைய பாடமாக தாவரவியல்/தாவர உயிரியல் பாடமும் ஆகக் குறைந்தது இரண்டு வருடமாவது க.பொ.த (உயர்தரம்) பாடத்திட்டத்தின்படி பயின்றிருக்க வேண்டும். அல்லது மூன்று வருட பொதுப் பட்டப்படிப்பில், தாவரவியல் / தாவர உயிரியல் மற்றும் விலங்கியல் ஆகிய இரண்டு பாடங்களையும் சேர்த்து, மொத்த பாடத் திறனில் குறைந்தது 1/3 க.பொ.த (உயர்தரம்) பாடத்திட்டத்தின்படி பயின்றிருக்க வேண்டும். | 19 | 2 | 3 |
| விவசாய விஞ்ஞானம் | 4 | விஞ்ஞான இளமாணி விவசாய தொழில்நுட்ப முகாமைத் துவப் பட்டம் | 0 | 0 | 1 |
| இணைந்த கணிதம் | 5 | பிரயோக, தூய கணித பாடங்களைக் கொண்ட விஞ்ஞான இளமாணிப் பட்டம் | 17 | 2 | 6 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 6 | பொறியியல் தொடர்பான விஞ்ஞான இளமாணிப் பட்டம் அல்லது<br>பொறியியல் தொழில்நுட்பத்தில் இளமாணி தொழில்நுட்பம் பட்டம் | 14 | 0 | 0 |
| உயிர் முறைமைகள் தொழில் நுட்பவியல் | 7 | விவசாயம் தொடர்பான விஞ்ஞான இளமாணிப் பட்டம் அல்லது உயிர் முறைமைகள் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம். | 6 | 2 | 0 |
| தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம் | 8 | பௌதீகவியல் பாடத்திற்கு வழங்கப்படும் கல்வித் தகுதிகள் இந்த பாடத்திற்கும் உரியதாகுவதுடன்,பௌதீகவியல் பிரதான பாடம் என்பது கட்டாயமாகும்.இரசாயணவியல் அத்துடன் /அல்லது உயிரியலில் பயின்றிருப்பது மேலதிக தகுதியாகக் கருதப்படும். | 12 | 1 | 0 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 9 | தகவல் தொழில்நுட்ப பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய பாடமாக பயின்ற பட்டம் | 62 | 3 | 4 |
| ஆங்கிலம் | 10 | B.A.(English as a major subject)> Bachelor of Education (TESL) | 4 | 2 | 1 |
| அரபு | 11 | Bachelor of Arts or Bachelor of Education Degree with the specific subject as the major subject in the degree | 0 | 1 | 0 |
| பிரெஞ்சு | 12 | Bachelor of Arts or Bachelor of Education Degree with the specific subject as the major subject in the degree | 2 | 0 | 0 |
| சீன | 13 | Bachelor of Arts or Bachelor of Education Degree with the specific subject as the major subject in the degree | 3 | 0 | 0 |
| ஜப்பான் | 14 | Bachelor of Arts or Bachelor of Education Degree with the specific subject as the major subject in the degree | 11 | 0 | 0 |

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | மொழி மூலம் | | |
|---|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| ஜெர்மன் | 15 | Bachelor of Arts or Bachelor of Education Degree with the specific subject as the major subject in the degree | 1 | 0 | 1 |
| ஹிந்தி | 16 | Bachelor of Arts or Bachelor of Education Degree with the specific subject as the major subject in the degree | 1 | 0 | 0 |
| குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு | 17 | குழந்தை உளவியலை ஒரு பாடமாக பயின்ற பட்டம் அல்லது குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பினை முக்கிய பாடமாக பயின்ற பட்டம் ஒன்று | 12 | 2 | 0 |
| சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு | 18 | சுகாதார மேம்பாட்டில் விஞ்ஞான இளமாணி (விசேட) பட்டம் அல்லது சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பை பிரதான பாடமாக பயின்ற பட்டம். | 2 | 0 | 0 |
| உடற்கல்வி மற்றும் விளையாட்டு | 19 | விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது விஞ்ஞான இளமாணி விசேட பட்டம் (உடற்கல்வி) அல்லது உடற்கல்வி மற்றும் விளையாட்டினை முக்கிய பாடமாகக் பயின்ற பட்டம் | 8 | 3 | 0 |
| அரங்கேற்றக் கலை | 20 | அரங்கேற்றக் கலை தொடர்பான சிறப்பு பட்டம் அல்லது கலைமாணி சிறப்புப் பட்டம் (அரங்கேற்றக் கலை / நுண் கலை/நடனம்/இசை) அல்லது நாடகமும் அரங்கியலும் தொடர்பான கலைமாணி சிறப்பு பட்டம் அல்லது கல்வியியல் பட்டம் (நாடகமும் அரங்கியலும்) அல்லது அரங்கேற்றக் கலை அல்லது நுண்கலையினை முக்கிய பாடமாகக் பயின்ற சிறப்பு பட்டம் | 2 | 2 | 0 |
| நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் | 21 | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் தொடர்பான முகாமைத்துவப் பட்டம் அல்லது நிகழ்ச்சிகள் முகாமைத்துவத்தினை முக்கிய பாடமாகக் கொண்ட பட்டம் | 12 | 0 | 0 |
| கைவினை | 22 | காட்சிக் கலையில் சிறப்புப் பட்டம் (சித்திரம், சிற்பம், அச்சுப்பதிப்புக் கலை, புடவை மற்றும் புடவை தொடர்பான கலைகள் போன்றவை) அல்லது காட்சிக் கலையில் மற்றும் வடிமைப்பில் சிறப்புப் பட்டம் (சித்திரம் மற்றும் கிராஃபிக் கலை) அல்லது காட்சிக் கலை மற்றும் தொழிநுட்ப கலைகளில் சிறப்புப் பட்டம் அல்லது கலைமாணி அல்லது நுண்கலைகளில் சிறப்புப் பட்டம் - (சித்திரக்கலை/கிராஃபிக்/சிற்பம்/ கட்புலக்கலை மற்றும் தொழில்நுட்பக் கலை ஆகிய பாடங்கள் அல்லது ஒரு பாடமாவது பிரதானமாக கற்றிருக்க வேண்டும்.) | 8 | 2 | 0 |
| உட்புற வடிவமைப்பு | 23 | கட்டடக்கலையில் விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது வடிவமைப்பியல் இளமானி பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலை தொடர்பான பட்டம் அல்லது உட்புற வடிவமைப்பை ஒரு முக்கிய பாடமாக கற்ற பட்டம் | 14 | 4 | 0 |
| நவநாகரீக வடிவமைப்பு | 24 | வடிவமைப்பு கலையில் பட்டம் அல்லது காட்சிக் கலையில் விசேட பட்டம் ( ஜவுளி மற்றும் ஆடைக் கலைகள்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் நவநாகரீக வடிமைப்பு மற்றும் தயாரிப்பு ஊக்குவிப்பு தொடர்பான பட்டம் அல்லது நவநாகரீக வடிமைப்பை ஒரு முக்கிய பாடமாக பயின்ற பட்டம் | 11 | 4 | 0 |

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | மொழி மூலம் | | |
|---|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| கிராஃபிக் வடிவமைப்பு | 25 | வடிவமைப்பியலில் பட்டம் அல்லது கட்புலக் கலையில் மற்றும் வடிவமைப்பு தொடர்பான கலைமாணி பட்டம் (சித்திரம் மற்றும் கிராபிக்ஸ்) அல்லது கணினி பொறியியலில் இளமாணி பொறியியல் பட்டம் கணினி விஞ்ஞானத்தில் இளமாணிப் பட்டம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டம் அல்லது தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தில் இளமாணிப் பட்டம் அல்லது பட்டப்படிப்புக்கான முக்கிய பாடமாக தகவல் மற்றும் தொடர்பாடலைக் கொண்ட பட்டம் அல்லது கணினி விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்டு விஞ்ஞான இளமாணிப் பட்டம் அல்லது (மேற்கண்ட பட்டப்படிப்பில் 1/3 ஆன கிரா/பிக் வடிவமைப்பு பாடத்தில் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்) கிரா/பிக் வடிவமைப்பை ஒரு பிரதான பாடமாகக் கொண்டு பயின்ற பட்டம் | 7 | 5 | 0 |
| நிலத்தோற்ற கட்டக்கலை | 26 | விவசாயத்தில் சிறப்புப் பட்டம் (தோட்டக்கலையில் நிபுணத்துவத்துடன்) அல்லது தோட்டக்கலை, மலர் செய்கை மற்றும் நிலத்தோற்ற கட்டக்கலை ஆகியவற்றில் பட்டம் | 4 | 2 | 0 |
| பயன்பாட்டு தோட்டக்கலை தொழில் நுட்பத்தில் கற்கைகள் | 27 | விஞ்ஞானத்தில் விவசாய இளமாணி சிறப்புப் பட்டம் (தோட்டக்கலையில் நிபுணத்துவத்துடன்) தோட்டக்கலை, மலர் செய்கை மற்றும் நிலப்பரப்பு நிலத்தோற்ற கட்டக்கலையில் பட்டம் அல்லது<br>பயன்பாட்டு தோட்டக்கலை தொழில் நுட்பத்தினை ஒரு முக்கிய பாடமாக பயின்ற பட்டம் | 1 | 0 | 0 |
| கால்நடை வள உற்பத்தி தொழில்நுட்ப கற்கைகள் | 28 | விஞ்ஞானத்தில் விவசாய இளமாணி சிறப்பு பட்டம் (விலங்கு அறிவியல் நிபுணத்துவத்துடன்) அல்லது கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளத்தில் பட்டம் அல்லது கால்நடை வளர்ப்பில் விஞ்ஞான பட்டம் இளமாணி அல்லது கால்நடை உற்பத்தி தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய பாடமாகப் பயின்ற பட்டம் | 5 | 1 | 0 |
| உணவு உற்பத்தி தொழில்நுட்ப கற்கைகள் | 29 | உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பட்டம் அல்லது உணவு விஞ்ஞானம் தொழில்நுட்பத்தில் சிறப்புப் பட்டம் அல்லது உணவு விஞ்ஞானம் போசாக்கு தொடர்பான பட்டம் அல்லது விஞ்ஞான இளமாணி பட்டத்துடன் உணவு விஞ்ஞான தொழிநுட்ப விஞ்ஞான இளமாணிப் பட்டம் அல்லது விவசாய விஞ்ஞானமாணி உணவு விஞ்ஞான தொழிநுட்ப சிறப்பு பட்டம் (முழு பாடத்திட்டத்தில் 60% உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பாடம் உள்ளடக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்). விஞ்ஞான இளமாணி உணவு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்தில் சிறப்புப் பட்டம் (முழு பாடத்திட்டத்தில் 60% இற்கு குறையாது உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பாட உள்ளடக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்).<br>விவசாயம் தொடர்பான விஞ்ஞான இளமாணி சிறப்புப் பட்டம் (உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவத்துடன்) அல்லது உணவு வழங்கல் தொழில்நுட்பத்தில் பட்டம் | 11 | 12 | 0 |

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | மொழி மூலம் | | |
|---|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| நீர் வளங்கள் தொழில்நுட்ப கற்கைகள் | 30 | விவசாயத்தில் சிறப்புப் பட்டம் (மீன் வளர்ப்பில் நிபுணத்துவம் பெற்றவர்) அல்லது நீர்வள முகாமைத்துவம் மற்றும் விலங்கியல் இளமாணி சிறப்புப் பட்டம் அல்லது விலங்கு பராமரிப்பு மற்றும் மீன்வளத்தில் இளமாணிப் பட்டம் அல்லது நீர்வள முகாமைத்துவத்தை ஒரு முக்கிய பாடமாக கெண்ட இளமாணிப் பட்டம் அல்லது நீர்வள தொழிநுட்பத்தை, முக்கிய பாடமாக பயின்ற பட்டம். | 3 | 1 | 0 |
| பெருந் தோட்ட பயிர் உற்பத்தி தொழில்நுட்ப கற்கைகள் | 31 | விவசாய இளமாணி சிறப்புப் பட்டம் அல்லது ஏற்றுமதி விவசாய இளமாணி பட்டம் அல்லது தோட்ட பயிர் உற்பத்தி தொழில்நுட்பத்தினை, முக்கியப் பாடமாகப் பயின்ற பட்டம் | 13 | 1 | 0 |
| நிர்மாண தொழில்நுட்ப கற்கைகள் | 32 | குடிசார் பொறியியல் இளமாணி பொறியியல் அல்லது கட்டுமானம் மற்றும் கட்ட சேவைகள் தொழில்நுட்பம் உட்பட பொறியியல் தொழில்நுட்ப இளமாணி அல்லது இளமாணி தொழில்நுட்ப இளமாணி அல்லது கட்டுமான தொழில்நுட்பத்தினை முக்கிய பாடமாக பயின்ற பட்டம். | 27 | 2 | 0 |
| மோட்டார் இயக்கவியல் தொழில்நுட்பம் பற்றிய கற்கைகள் | 33 | தொழில்நுட்பவியல் பட்டம் (மோட்டார் இயக்கவியல்) அல்லது விஞ்ஞான இளமாணி பொறியியல் பட்டம் (மோட்டார் இயக்கவியல்) அல்லது மோட்டார் இயக்கவியல் தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய பாடமாக பயின்ற பட்டம் | 31 | 6 | 0 |
| மின் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்ப கற்கைகள் | 34 | மின் மற்றும் இலத்திரனியல் தொடர்பான இளமாணி பொறியியல் அல்லது இளமாணி பொறியியல் தொழில்நுட்பம் அல்லது இயக்கவியல் இலத்திரனியல் விஞ்ஞானத்தில் சிறப்பு பட்டம் அல்லது மின் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்பத்தினை பிரதான பாடமாகப் பயின்ற பட்டம். | 31 | 11 | 0 |
| புடவை மற்றும் ஆடை தொழில்நுட்ப கற்கைகள் | 35 | வடிமைப்புக் கலைப் பட்டம் அல்லது புடவை மற்றும் ஆடைத் துறையில் இளமாணி பொறியியல் பட்டம் அல்லது தொழில்நுட்பவியல் பட்டம் அல்லது புடவை மற்றும் ஆடை தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய பாடமாகப் பயின்ற பட்டம். | 21 | 4 | 0 |
| உலோக செயலாக்க தொழில்நுட்பம் பற்றிய கற்கைகள் | 36 | இயந்திர இளமாணி தொழில்நுட்பப் பட்டம் (பொது) அல்லது மெக்கானிக்கல் தொழிநுட்பத்துடன் இளமாணிப் பட்டம் (பொது) அல்லது உலோக செயலாக்க தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாக பயின்ற பட்டம் | 14 | 4 | 0 |
| அலுமினியம் செயலாக்க தொழில்நுட்ப கற்கைகள் | 37 | தொழிநுட்பவியல் பட்டம் (சிவில் /கட்டுமானம் /இயந்திரம்) அல்லது அலுமினிய செயலாக்க தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாக பயின்ற பட்டம். | 19 | 2 | 0 |

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | மொழி மூலம் | | |
|---|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு | 38 | மூன்றாண்டு காலத்தைக் கொண்ட தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம் / கணினி பொறியியல் தொடர்பான பட்டம் (அந்தப் பட்டத்திற்காக பின்வரும் பாடப் பிரிவுகளில் மொத்தப் பட்டப் படிப்பில் 1/ 5 மதிப்புள்ள பாடங்களில் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்) அல்லது நான்காண்டு காலத்தைக் கொண்ட தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம் /கணினி பொறியியல் தொடர்பான பட்டம் (அந்தப் பட்டத்திற்காக பின்வரும் பாடப் பிரிவுகளில் மொத்தப் பட்டப் படிப்பில் 15% சதவீத பாடங்களில் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்) அல்லது கணினி விஞ்ஞானத்தை முக்கிய பாடமாக பயின்ற விஞ்ஞானமாணி/ தொழிநுட்பவியல் /பட்டத்துடன் தகவல் தொழில்நுட்பம்/ கணினி தொழில்நுட்பம்/ கணினி வன்பொருள்/கணினி வலையமைப்பு ஆகியவற்றில் முதுகலை பட்டம் (அந்த முதுகலைப் பட்டப்படிப்புக்கான மொத்த பாடங்களில் 1/5 மதிப்பில் பின்வரும் பாடப் பிரிவுகளில் கற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்) பாடத் துறைகள்<br>(i) Computer Hardware<br>(ii) Computer system Engineering<br>(iii) Computer Networks<br>(iv) Computer Architecture<br>(v) Operating System<br>(vi) Electronics<br>(vii) Arduino Technology<br>(viii) IT Security<br>(ix) Network Security<br>(x) Information Security<br>(xi) Cyber Security<br>(xii) Computer Hardware and Network related Project | 6 | 5 | 0 |
| உற்பத்தி | 39 | மூன்று வருட காலத்தினைக் கொண்ட இயந்திரப் பொறியியல் தொடர்பான பட்டம். | 11 | 0 | 0 |
| பயணம் மற்றும் விருந்தோம்பல் | 40 | விருந்தோம்பல் மற்றும் ஓய்வு முகாமைத்துவ நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம் அல்லது சுற்றுலா முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி சிறப்பு பட்டம் அல்லது விருந்தோம்பல் சேவை முகாமைத்துவத்தில் இளமாணி விஞ்ஞான சிறப்பு பட்டம் அல்லது விருந்தோம்பல் சுற்றுலா வணிக நிகழ்வுகள் பட்டம் அல்லது சுற்றுலா முகாமைத்துவத்தில் சிறப்புப் பட்டம் அல்லது சுற்றுலா முகாமைத்துவ பட்டம் அல்லது சுற்றுலா மற்றும் கலாச்சார வள முகாமைத்துவ பட்டம் அல்லது சுற்றுலா மற்றும் விருந்தோம்பலினை ஒரு பாடமாகக் கொண்டு பயின்ற பட்டம். | 12 | 11 | 0 |
| வழங்கல் முகாமைத்துவம் | 41 | ஒரு முக்கிய பாடமாக வழங்கல் முகாமைத்துவத்தினை உள்ளடக்கிய பட்டம். | 7 | 0 | 0 |
| சந்தைப் படுத்தல் | 42 | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் பற்றி அல்லது வணிக நிர்வாகத்தைப் பற்றி அல்லது வணிக முகாமைத்துவம் பற்றி அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்டம் அல்லது வணிகமாணிப் பட்டம் அல்லது பிரதான பாடமாக சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தைக் கொண்ட பட்டம் | 13 | 3 | 0 |

திலக் செனரத்,
செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா)

மாகாண அரச சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்,
2023, ஒகத்து 09.